# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 மார்கழி 24 வியாழக்கிழமை 08.01.2026 கதிர் 433



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -
யாழ் முற்றம்
Yarl Muttram
Youtube Channel






## வடக்கு, கிழக்கில் வெள்ள அபாயம்!

### 7 மாவட்டங்களுக்கு முன்னெச்சரிக்கை

கொழும்பு, ஜன. 08

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உள்ளிட்ட சில பகுதிகளுக்கு வெள்ளப்பெருக்கு தொடர்பான முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு, பொலனறுவை, அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் நீர்நிலைகளை அண்மித்த தாழ்நிலப் பகுதிகளில் வெள்ளம் ஏற்படக்கூடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் வெள்ளம் தொடர்பில் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும் எனக் கோரப்பட்டுள்ளனர்.

7➤

# ஹரிணிக்கு எதிரான பிரேரணை நிச்சயம் தோற்கடிக்கப்படும்!

### இப்படி பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க நம்பிக்கை



கொழும்பு, ஜன. 08

கல்வி அமைச்சரான பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தோற்கடிக்கப்படும் என்று பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க இன்று ஊடகங்களிடம் தெரிவித்தார்.


அரசியல் ரீதியில் வங்குரோத்தடைந்துள்ள எதிரணிகள், தமது அரசியல் இருப்புக்காகவே பிரேரணையை முன்வைக்கின்றன என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

கல்வி மறுசீரமைப்பில் ஏற்பட்டுள்ள குழப்பத்தை அடிப்படையாகக் கொண்டு பிரதமருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்வைப்பதற்கு பிரதான எதிர்க்கட்சி திட்டமிட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் கையொப்பம் திரட்டும் நடவடிக்கையும் நேற்று ஆரம்பமாகியது. பெரும்பாலும் நாளை சபாநாயகரிடம் பிரேரணை கையளிக்கப்படும்.

இந்நிலையிலேயே பிரதி அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

## திருகோணமலை கடலில் சிவப்புக் கொடி எச்சரிக்கை



திருகோணமலை, ஜன. 08

திருகோணமலை கடற்கரையை அண்டிய கடற்பகுதியில் அலையின் உக்கிரம் காணப்படுவதால் கடலினுள் சுற்றுலாப் பயணிகள் இறங்குவது ஆபத்தானது என்ற நிலையில் கடற்படையினரால் சிவப்புக்கொடி பறக்க விடப்பட்டுள்ளது.

7➤

## சிறுபான்மையினரின் உரிமைகளில் அக்கறை செலுத்தும் நாமல் எம். பி.



கொழும்பு, ஜன. 08

தெற்காசியாவின் வலுவான பிராந்திய ஒத்துழைப்புக்குரிய தலைமைத்துவத்தை இந்தியா வகிக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்ளார்.

தனது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில் அவர் இந்த விடயத்தைப் பதிவிட்டுள்ளார்.

உலகளாவிய பாதுகாப்பு முன்னேற்றங்களுக்கு மத்தியில் தெற்காசியாவின் வலுவான ஒத்துழைப்பு அவசியம்

7➤

## பேரிடரால் வீடுகளை இழந்தோருக்கு வீடு அமைக்கும் பணி நாளை ஆரம்பம்

கொழும்பு, ஜன. 08

டித்வா சூறாவளியால் சேதமடைந்த வீடுகளுக்குப் பதிலாக புதிய வீடுகளை நிர்மாணிக்கும் வேலைத்திட்டம் நாளை ஆரம்பமாகின்றது.

ரீ பில்டிங் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்தின் கீழ் இதற்குரிய நடவடிக்கை இடம்பெறும்.

இதற்கமைய டித்வா சூறாவளியால் முழுமையாகச் சேதமடைந்த வீடுகளுக்குப் பதிலாக புதிய

7➤



- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# வெள்ள அபாய எச்சரிக்கை குறித்து நீர்ப்பாசனத் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிவித்தல்!

கொழும்பு, ஜன.08

வெள்ளப் பெருக்கு ஏற்படுவதற்கான சாத்தியம் குறித்து எச்சரிக்கை! நாட்டின் பல பகுதிகளுக்கு வெள்ளப் பெருக்கு ஏற்படுவதற்கான சாத்தியம் உள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களம் முன்னெச்சரிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

நேற்று (07) இரவு 11.00 மணியளவில் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது.

அதன்படி அம்பாறை, மட்டக்களப்பு, பொலன்னறுவை, அனுராதபுரம், திருகோணமலை, வவுனியா மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ள ஆற்றுப் படுக்கைகளை அண்மித்த பகுதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்படுவதற்கான அபாயம் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களத்தின் வானிலை முன்னறிவிப்புக்கு அமைவாக ஊவா, கிழக்கு, மத்திய, வடமத்திய மற்றும் வடக்கு மாகாணங்களில் அமைந்துள்ள ஆற்று நீரேந்துப் பகுதிகளில் அதிக மழைவீழ்ச்சி பதிவாகக் கூடும் என்பதால் இந்த வெள்ள அபாய நிலை உருவாகலாம் என நீர்ப்பாசனத் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதன் காரணமாக குறித்த மாவட்டங்களில் உள்ள ஆறுகளை அண்மித்த தாழ்நிலப் பகுதிகளிலும், நதிக்கரைகளிலும் வசிக்கும் மக்கள் இது குறித்து மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறு நீர்ப்பாசனத் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

# சட்டவிரோத மதுபானம் அருந்தியதால் உயிரிழந்த சம்பவம்- பிரதான சந்தேக நபர் கைது!

வென்னப்புவ, மாரவில பிரதேசத்தில் சட்டவிரோத மதுபானம் அருந்தியதால் 06 பேர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் பிரதான சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். காலவத்தை, கிழக்கு பண்டிரிப்புவ பிரதேசத்தைச் சேர்ந்த 47 வயதுடைய நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 6ஆம் திகதி வென்னப்புவ, மாரவில பிரதேசத்தில் சட்டவிரோத மதுபானம் அருந்தியதால் உயிரிழந்ததாக சந்தேகிக்கப்படும் மூன்று நபர்களின் சடலங்கள் வீடொன்றிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டது.

கவலைக்கிடமான நிலையில் இருந்த மேலும் இரண்டு பேர் வென்னப்புவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தனர்.


உயிரிழந்தவர்களில் 5 பேரின் பிரேத பரிசோதனைகள் சிலாபம் வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்டன.

இதன் போது மதுசாரம் நஞ்சானதாலேயே இந்த மரணங்கள் நிகழ்ந்துள்ளன என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மற்றைய நபரின் பிரேத பரிசோதனை இன்று (08) சிலாபம் வைத்தியசாலையில் நடைபெறவுள்ளது. மதுபானம் அருந்தி உடல்நலக்குறைவு ஏற்பட்ட மேலும் 08 பேர் தற்போது நீர்கொழும்பு மற்றும் பேராதனை வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த சம்பவம் தொடர்பில் ஏற்கனவே இரண்டு பெண் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

குறித்த இரு பெண்களையும் நேற்று (07) மாரவில நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தியதையடுத்து, அவர்களை எதிர்வரும் 19ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

சமபவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை வென்னப்புவ பொலிஸார் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




# நாளை பிற்பகல் கரையைக் கடக்கும் தாழமுக்கம்

வங்காள விரிகுடாவில் உருவாகியுள்ள தாழமுக்கமானது, நாளை (09) பிற்பகல் வேளையில் ஹம்பாந்தோட்டை மற்றும் கல்முனை ஆகிய பிரதேசங்களுக்கு இடைப்பட்ட பகுதியினூடாக நாட்டிற்குள் நுழையக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அதுல கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

சீரற்ற வானிலை நிலைமை தொடர்பில் தெளிவுபடுத்தும் விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்தத் தாழமுக்கமானது தற்போது நாட்டின் கிழக்குக் கரையோரப் பகுதியான பொத்துவிலுக்குத் தென்கிழக்கே சுமார் 350 கிலோ மீற்றர் தொலைவில் நிலை கொண்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

தாழமுக்கம் கரையை நெருங்கி வருவதால், மறு அறிவித்தல் வரும் வரை கடற்றொழில் மற்றும் கடல்சார் நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் தவிர்க்குமாறும் மீனவ மற்றும் கடற்படை சமூகத்திற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஐ)



# பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு முன்னுரிமை: பிமல் ரத்நாயக்க



கொழும்பு, ஜன.08

பிரதமர் ஹரிணி அமரசூரியவுக்கு எதிராக எதிர்க்கட்சியினரால் கொண்டுவரப்படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு, நாடாளுமன்ற நிலையியற் கட்டளைகளுக்கு இணங்க முன்னுரிமை அளிக்க அரசாங்கம் தயாராக இருப்பதாக சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க இன்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

அடுத்த நாடாளுமன்ற அமர்வுக்கான விவாதங்களை தீர்மானிக்கும் "நாடாளுமன்ற விவகாரக் குழுக் கூட்டம்" ஏன் இந்த வாரம் நடைபெறவில்லை என்று எதிர்க்கட்சியின் முதற்கோலாளர் கயந்த கருணாதிலக்க கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த பிமல் ரத்நாயக்க, இரண்டு முக்கிய சட்டவாக்கங்கள் குறித்த நீதிமன்றத் தீர்ப்புகளுக்காக அரசு காத்திருப்பதாகக் கூறினார்.

அத்துடன், எதிர்க்கட்சியினர் தயாரித்து வரும் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு நிலையியற் கட்டளைகளின்படி முன்னுரிமை அளிக்க வேண்டியுள்ளதால், அதனையும் கருத்திற் கொண்டு கூட்டத்தை நடத்த அரசாங்கம் காத்திருப்பதாகத் தெரிவித்தார்.

நாடாளுமன்ற அமர்வு நாட்களிலேயே விவகாரக் குழுக் கூட்டத்தை நடத்துவதுதான் வழமையான நடைமுறை என்று சுட்டிக்காட்டிய கயந்த கருணாதிலக்க, விவாதங்களுக்குத் தயாராவதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குப் போதுமான கால அவகாசம் வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

அடுத்த அமர்வு வாரத்திற்கான விவாதங்களுக்குத் தயாராவதற்கு உறுப்பினர்களுக்குப் போதிய கால அவகாசம் கிடைக்கும் வகையில், விவகாரக் குழுக் கூட்டம் விரைவில் திட்டமிடப்படும் என்று பிமல் ரத்நாயக்க உறுதியளித்தார். (ஐ)

## திடீர் வெள்ளப்பெருக்கு ஏற்பட வாய்ப்பு அவதானமாக இருக்க அறிவுறுத்தல்

கொழும்பு, ஜன.08

இலங்கைக்குத் தென்கிழக்காக வங்காள விரிகுடா கடற்பரப்பில் நிலை கொண்டுள்ள தாழமுக்கம் காரணமாக, நாட்டிற்கு அதி தீவிர மழைவீழ்ச்சி கிடைக்குமாயின் நீர்நிலைகளின் சடுதியாக நீர்மட்டம் அதிகரிக்கக்கூடும் என நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவிக்கிறது.

இன்று (08) காலை நிலவும் வானிலை குறித்துத் தெளிவுபடுத்தும் விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பொறியியலாளர் எல்.எஸ். சூரியபண்டார, தற்போதைய வானிலை முன்னறிவிப்புகளுக்கு அமையச் சில மாவட்டங்களில் வெள்ளப்பெருக்கு அபாயம் ஏற்பட இடமுண்டு என்று தெரிவித்தார்.

விசேடமாக அம்பாறை, மட்டக்களப்பு, அனுராதபுரம், பொலன்னறுவை, திருகோணமலை மற்றும் வடக்குப் பிரதேசங்களில் தீவிர மழைவீழ்ச்சி பதிவானால், பிரதான ஆறுகள் இல்லாவிடினும் எதிர்காலத்தில் வெள்ள நிலைமை ஒன்று ஏற்படுவதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளதாகவும், மக்கள் அது குறித்து அவதானமாக இருக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், தற்போது அநேகமான குளங்களில் அபாய மட்டத்திற்கும் கீழேயே நீர்மட்டம் காணப்படுவதாகக் கூறிய அவர், நீர்ப்பாசனக் கணிப்பீடுகளின்படி ஒட்டுமொத்த குளங்களின் நீர் கொள்ளளவில் 80ூ - 90ூ இற்கும் இடைப்பட்ட அளவே காணப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

தற்போதைய நிலையில் விசேடமாகக் கிழக்கு, வடக்கு, வடமத்திய, மத்திய, தெற்கு மற்றும் ஊவா மாகாணங்களை உள்ளடக்கிய குளங்களில் வான் பாயும் நிலை காணப்படுவதாகவும், 73 பிரதான குளங்களில் 25 குளங்கள் வான் பாய்ந்து கொண்டிருப்பதாகவும், நடுத்தர அளவிலான 24 குளங்கள் தற்போது வான் பாய்ந்து கொண்டிருப்பதாகவும் பொறியியலாளர் எல்.எஸ். சூரியபண்டார தெரிவித்தார்.

இங்கு சூரியபண்டார மேலும் குறிப்பிடுகையில், நேற்று (07) மற்றும் இன்று (08) ஆகிய தினங்களில் வான் கதவுகள் திறக்கப்பட்டு குளங்களில் குறிப்பிடத்தக்க இடவசதி பேணப்பட்டு வருகின்ற போதிலும், தீவிர மழைவீழ்ச்சி ஏற்பட்டால் மேலும் வான் கதவுகளைத் திறக்க நேரிடும் என்றார்.

இதேவேளை, 6 மகாவலி நீர்த்தேக்கங்கள் தற்போது வான் பாய்ந்து கொண்டிருப்பதுடன், லொக்கலஓயா, ஹேபொல, மாதுருஓயா, கந்தலயம, கலாஓயா மற்றும் களுகங்கை என்பன அவற்றில் அடங்குகின்றன.

மகாவலி அதிகாரசபைக்குச் சொந்தமான நீர்த்தேக்கங்களில் சுமார் 95ூ நீர் கொள்ளளவு காணப்படுகின்ற போதிலும், கொத்மலை நீர்த்தேக்கத்தின் நீர் கொள்ளளவு 59ூ ஆகக் காணப்படுவதாக மகாவலி நீர் முகாமைத்துவப் பணிப்பாளர் நிலந்த தனபால தெரிவித்தார். (ஐ)

## மாகாண சபை தேர்தல் தொடர்பான தெரிவுக்குழு விவகாரம் காலத்தை கடத்தும் நாடகம் - சபா குகதாஸ் குற்றச்சாட்டு!

மூன்றில் இரண்டு பெரும்பான்மை இருந்தும் மாகாண சபை தேர்தலை நடத்துவது தொடர்பாக இந்த அரசாங்கமானது தெரிவு குழு விடயத்தை கொண்டு வருவது ஒரு காலத்தை கடத்துகின்ற நாடகம் என வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினரும் டெலோ கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட அமைப்பாளருமான சபா குதாஸ் தெரிவித்துள்ளார்.

இன்றைய தினம் அவரது இல்லத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கமானது மாகாண சபை தேர்தலை நடாத்துவது தொடர்பான தெரிவுக்குழுவை நியமிப்பதற்கான பிரேரணையை மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் மூலமாக பாராளுமன்றத்திற்கு கொண்டுவரவுள்ளது.

உண்மையிலேயே இந்த அரசாங்கமானது மாகாண சபை தேர்தலை நடத்துவதற்காக தெரிவுக் குழுவை நியமிப்பது என்பது ஒரு அவசியமற்ற விடயம். ஏனெனில் இந்த அரசாங்கமானது பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை கொண்டுள்ளது.

உண்மையிலேயே மாகாண சபை தேர்தலை நடத்துவதாக இருந்தால் இந்த அரசாங்கம், 2017 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட 17ஆம் இலக்க சட்டத்தை மாற்றியமைத்து உடனடியாக பழைய முறை மூலம் தேர்தலை நடாத்த முடியும். அவ்வளவு அதிகாரமும் பலமும் இந்த அரசிடம் உள்ளது. இந்த தேர்தலை உடனடியாக நடத்துவதற்கு அனுர அரசுக்கு விருப்பம் இல்லாத காரணத்தினாலேயே இந்த தெரிவு குழுவை கொண்டு வருகின்றது.

கடந்த காலத்தில் முரண்பாடாக இருந்த அந்த எல்லை நிர்ணயம் என்ற விடயத்தை மீண்டும் கொண்டு வந்து காலத்தை இழுத்தடிக்கின்ற நோக்கத்தில் தான் இந்த தெரிவுக்குழு விடயத்தை பிரேரணை மூலமாக பாராளுமன்றத்தில் கொண்டு வருகின்றார்கள்.

கடந்த காலத்தில் எதிர்க்கட்சியில் இருந்த அனுரகுமார உள்ளடங்கலான தரப்பினர், கடந்த ஆட்சியாளர்கள் இவ்வாறான தெளிவுக்குழுவை கொண்டு வரும்போது கடுமையாக விமர்சித்தவர்கள். இந்த தெரிவுக்குழுக்கள், ஆணைக்குழுக்கள் எல்லாம் காலத்தை கடத்தி, பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதியை நீர்த்துப்போக செய்கின்ற ஒரு விடயம் என்பது அனைவருக்கும் தெரியும். அந்த அடிப்படையிலேயே இந்த மாகாண சபை தேர்தல் தொடர்பான தெரிவிக்கு குழுவும் கொண்டுவரப்படுகின்றது.

அண்மையில் ஏற்பட்ட டித்வா புயலால் நாட்டு மக்கள் அனைவரும் பாரிய இழப்பினை சந்தித்திருக்கின்றார்கள். பொருளாதாரம் பின்னடைந்து இருக்கின்ற நிலையில் மீளவும் நாட்டை கட்டை எழுப்ப இரண்டு ஆண்டுகள் தேவைப்படுகின்றன. இந்நிலையில் நாட்டினை மீளவும் கட்டி எழுப்புவதற்கு ஏதுவான ஒரு கட்டமைப்பு தான் மாகாண சபை.

ஒன்பது மாகாண சபைகளும் மக்கள் பிரதிநிதிகளால் நிர்வகிக்கப்படுமாக இருந்தால் அது மத்திய அரசாங்கத்துக்கு ஒரு பலமாக இருக்கும். அரசாங்கம் கொண்டு வருகின்ற நடைமுறைகளை இலகுவாக செய்யக் கூடியதாக இருக்கும்.

எல்லை நிர்ணயமானது மீள் நிர்ணயம் செய்யப்பட்ட பின்னர் தான் தேர்தலை நடாத்துவது என்ற விடயம் தெரிவுக்குழு மூலம் வருவதற்கு தான் இந்த அரசாங்கம் காத்திருக்கின்றது என்ற எதிர் அணியினரின் குற்றச்சாட்டுகள் எதிர்காலத்தில் உண்மையாகத்தான் இருக்கப் போகின்றது என நான் நினைக்கின்றேன்.

அரசு பலமாக இருக்கின்ற சூழ்நிலையில் பழைய தேர்தல் முறையில் தேர்தலை நடத்தலாம். அல்லது எல்லை நிர்ணயம் என்பதனை ஒரு மாதத்திற்குள் முடிவுறுத்தி தேர்தலை நடத்தலாம். இவ்வாறு இல்லாவிட்டால் தெருவுக்குழு என்பது காலத்தை கடத்தும் நாடகமாகத்தான் பார்க்கப்படுகின்றது என்றார். (ஐ)

## திருகோணமலையில் தேசிய டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் தீவிரம்!



"வளமான நாடும் – அழகான வாழ்க்கையும்" எனும் தொனிப்பொருளின் கீழ், தூய்மையான நகரத்தையும் ஆரோக்கியமான வாழ்க்கையையும் உறுதிப்படுத்தும் நோக்கில் தேசிய டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்தின் இரண்டாம் நாள் நிகழ்வுகள் இன்று (08) கிண்ணியாவில் முன்னெடுக்கப்பட்டன.

பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் விசேட அறிவுறுத்தல்களுக்கு அமைவாக, கிண்ணியா நகர சபை, பிரதேச செயலகம் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் (ஆமூஉ) ஆகியன இணைந்து இவ்வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுத்தன.

இன்றைய இரண்டாம் நாள் நடவடிக்கையின் போது, கிண்ணியா அண்ணல் நகர் பகுதி மற்றும் அதனைச் சூழவுள்ள பாடசாலை வளாகங்களில் தீவிரமான டெங்குப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

நுளம்பு பெருகக்கூடிய இடங்களை அடையாளம் கண்டு அழிப்பதற்கும், பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஊட்டுவதற்கும் இதன்போது முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.

இதன்போது முன்னெடுக்கப்பட்ட களப் பரிசோதனைகளின் போது, நுளம்பு பெருகக்கூடிய வகையில் சுற்றுப்புறத்தைச் சீர்கேடாக வைத்திருந்த நபர்களுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

பொதுச் சுகாதாரத்தைப் பேணுவதில் அசமந்தமாக இருப்பவர்களுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கைகள் தொடரும் என இதன்போது அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்தனர். (ஐ)

# கரூர் கூட்ட நெரிசல் வழக்கில் தவெக நிர்வாகிகள், நெடுஞ்சாலை அதிகாரிகள் உள்ளிட்ட 15 பேர் சிபிஐ விசாரணைக்கு ஆஜர்



கரூர் கூட்ட நெரிசல் வழக்கில் தவெக நிர்வாகிகள், நெடுஞ்சாலை அதிகாரிகள் உள்ளிட்ட 15 பேர் சிபிஐ விசாரணைக்கு ஆஜராகியுள்ளனர். கரூர் சிபிஐ அலுவலகத்தில் தவெக நிர்வாகிகள், நெடுஞ்சாலைத் துறை அதிகாரிகள் ஆஜராகியுள்ளனர். கரூரில் கடந்த செப்டம்பர் 27ம்தேதி நடந்த விஜய் பிரசாரத்தில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்த வழக்கை சிபிஐ விசாரித்து வருகிறது. இந்த நிலையில் இந்த வழக்கு சம்பந்தமாக தவெக மாநில பொது செயலாளர் புஸ்ஸி ஆனந்த், இணை பொது செயலாளர் நிர்மல்குமார், தேர்தல் பிரசார மேலாண்மை பொது செயலாளர் ஆதவ் அர்ஜுனா மற்றும் கரூர் மாவட்ட செயலாளர் மதியழகன் ஆகியோர் கரூர் சிபிஐ விசாரணை அலுவலகத்திற்கு வரவழைக்கப்பட்டு கடந்த நவம்பர் 24, 25 ஆகிய 2 நாட்கள் விசாரணை நடந்தது.

இவர்களை தொடர்ந்து கரூர் எஸ்பி ஜோஸ் தங்கையா, ஏடிஎஸ்பி பிரேமானந்த், டிஎஸ்பி செல்வராஜ் மற்றும் டவுன் இன்ஸ்பெக்டர் மணிவண்ணன் ஆகியோரிடமும் சிபிஐ அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டனர்.

இந்நிலையில், இந்த விசாரணையை தீவிரப்படுத்தும் வகையில் சம்மனையடுத்து, டெல்லி சிபிஐ தலைமை அலுவலகத்தில் டிச.29ம்தேதி புஸ்ஸி ஆனந்த், ஆதவ் அர்ஜுனா, நிர்மல்குமார், மதியழகன் மற்றும் கரூர் எஸ்பி, ஏடிஎஸ்பி, டிஎஸ்பி, இன்ஸ்பெக்டர் ஆகியோரும் தனித்தனியாக நேரில் ஆஜராகி விளக்கமளித்தனர். சிபிஐ எஸ்பி சுனில்குமார் தலைமையிலான அதிகாரிகள் தொடர்ந்து 3 நாட்கள் விசாரணை மேற்கொண்டனர். இந்த விசாரணையின்போது, சென்னையில் இருந்து காலதாமதமாக புறப்பட்டது ஏன்? அதிக அளவிலான கூட்டம் சேர்ந்த பிறகும் விரைந்து செல்லாமல் இருந்தது ஏன்? காவல்துறை கூறிய பிறகும் வாகனத்தை நிறுத்தாமல் முன்னேறி சென்றது ஏன்? இதற்கெல்லாம் யார் காரணம்? என ஆதவ், நிர்மல்குமாரிடம் சிபிஐ அதிகாரிகள் கிடுக்கிப்பிடி கேள்விகளை கேட்டனர். அப்போது ஒருவரை ஒருவர் மாறி மாறி கை நீட்டி போட்டுக்கொடுத்தனர். இந்த வழக்கில் தொடர்புடைய அனைத்து தரப்பினருடமும் சிபிஐ விசாரணை நடத்தி உள்ள நிலையில், தவெக தலைவர் விஜய்யிடம் மட்டும் விசாரணை நடத்தப்படாமல் இருந்தது. இந்நிலையில், ஜன.12ம் தேதி டெல்லி சிபிஐ தலைமை அலுவலகத்தில் விசாரணைக்காக நேரில் ஆஜராக வேண்டும் என தவெக தலைவர் விஜய்க்கு சிபிஐ அதிகாரிகள் சம்மன் அனுப்பியுள்ளனர். விஜய்யிடம் சிபிஐ விசாரிக்க உள்ளதால் கரூர் சம்பவம் தொடர்பான விசாரணை இறுதி கட்டத்தை எட்டியுள்ளது. (ஐ)

# அதிமுக முன்னாள் எம்.எல்.ஏ.வும் ஓபிஎஸ் ஆதரவாளருமான சுப்புரத்தினம் திமுகவில்



அதிமுக முன்னாள் எம்.எல்.ஏ.வும் ஓபிஎஸ் ஆதரவாளருமான சுப்புரத்தினம் திமுகவில் இணைந்தார். 2026 சட்டமன்றத் தேர்தலுக்கு தமிழ்நாடு தயாராகி வருகிறது. இதனால் அரசியல் கட்சிகள் தொகுதி பங்கீடு தொடர்பான பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருகின்றன. இந்நிலையில் அதிமுக முன்னாள் எம்.எல்.ஏ.வும் ஓபிஎஸ் ஆதரவாளருமான சுப்புரத்தினம் திமுகவில் இணைந்தார். அண்ணா அறிவாலயத்தில் முதலமைச்சரை சந்தித்து திமுக-வில் இணைந்த முன்னாள் எம்எல்ஏ சுப்புரத்தினம் இணைந்தார்.

பழனி தொகுதி முன்னாள் எம்.எல்.ஏ சுப்புரத்தினம், சிவகாசி முன்னாள் எம்.எல்.ஏ பாலகங்காதரன் திமுகவில் இணைந்தனர். சுப்புரத்தினம், பாலகங்காதரன் இருவரும் 1991 சட்டமன்றத் தேர்தலில் அதிமுக சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்றவர்கள். திண்டுக்கல்லை சேர்ந்த வழக்கறிஞரான சுப்புரத்தினம் ஓபிஎஸ்-ன் மிக தீவிரமான ஆதரவாளர். அதிமுகவிலிருந்து ஓபிஎஸ் விளக்கப்பட்ட போது அவர் கூடவே பயணித்தவர். ஓபிஎஸ்-ன் சட்ட போராட்டங்களிலும் முக்கிய பங்கு வகித்தவர் சுப்புரத்தினம் ஆவார். (ஐ)

# மசூதி அருகே ஆக்கிரமிப்பு அகற்றம் டெல்லியில் திடீர் பதற்றம்: கண்ணீர் புகைகுண்டு வீச்சு கல்வீச்சில் 5 போலீஸ் படுகாயம்

டெல்லியில் நள்ளிரவில் நடைபெற்ற ஆக்கிரமிப்பு அகற்றும் பணியின் போது பொதுமக்கள் மற்றும் போலீசார் இடையே மோதல் வெடித்து கல்வீச்சு தாக்குதல் நடத்தப்பட்டதால் அப்பகுதியில் கண்ணீர் புகை குண்டு வீசப்பட்டது. டெல்லி உயர் நீதிமன்றம் கடந்த நவம்பர் மாதம் பிறப்பித்த உத்தரவின் அடிப்படையில், பழைய டெல்லியின் துர்க்மான் கேட் பகுதியில் உள்ள பொது இடங்களை ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ள கட்டிடங்களை அகற்ற டெல்லி மாநகராட்சி நிர்வாகம் (எம்.சி.டி) நடவடிக்கை எடுத்தது.

பைஸ்-இ-இலாஹி மசூதிக்கு அருகில் உள்ள ராம்லீலா மைதானம் மற்றும் அரசு நிலங்களை ஆக்கிரமித்து கட்டப்பட்டிருந்த திருமண மண்டபம் மற்றும் தனியார் மருத்துவ மையம் உள்ளிட்ட சட்டவிரோத கட்டிடங்களை இடிக்க முடிவு செய்யப்பட்டது. நேற்று அதிகாலை 1 மணியளவில் சுமார் 30 புல்டோசர்கள் மற்றும் பலத்த போலீஸ் பாதுகாப்புடன் மாநகராட்சி அதிகாரிகள் அப்பகுதிக்குச் சென்றனர். மசூதி அமைந்துள்ள 0.195 ஏக்கர் நிலத்தைத் தவிர்த்து, சுமார் 38 ஆயிரம் சதுர அடி பரப்பளவில் இருந்த மற்ற ஆக்கிரமிப்புகள் அனைத்தும் நள்ளிரவில் இடித்து தள்ளப்பட்டன.

ஆக்கிரமிப்பு அகற்றும் பணி தொடங்கியதும், அங்கு திரண்ட சுமார் 200க்கும் மேற்பட்ட உள்ளூர் மக்கள் அங்கிருந்த அதிகாரிகளை தடுத்து நிறுத்தி வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். திடீரென அவர்கள் போலீஸ் மற்றும் அதிகாரிகள் மீது சரமாரியாக கற்களை வீசித் தாக்கினர். இந்த வன்முறையில் 5 காவலர்கள் காயமடைந்தனர். நிலைமை விபரீதமானதால், கூட்டத்தை கலைக்க போலீசார் கண்ணீர் புகை குண்டுகளை வீசியும், தடியடி நடத்தியும் கலவரக்காரர்களை விரட்டியடித்தனர். மேலும் விரைவு அதிரடிப்படையினர் வரவழைக்கப்பட்டு நிலைமை கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. இந்த வன்முறை தொடர்பாக நான்கு பேர் கைது செய்யப்பட்டனர். ஒரு சிறுவன் பிடிக்கப்பட்டான். 10 முதல் 15 பேர் வரை தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் காவல்துறை தெரிவித்துள்ளது. (ஐ)







# இந்திரா காந்தி– மோடி வித்தியாசத்தை புரிந்து கொள்ளுங்கள்: டிரம்பின் கருத்து பற்றி ராகுல் விமர்சனம்

*பிரதமர் மோடியுடனான உறவுகள் மற்றும் வரிகள் குறித்து அமெரிக்க அதிபர் டிரம்ப் தெரிவித்த கருத்துகளின் பின்னணியில், காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி பாஜ அரசை கடுமையாக சாடினார்.*

*1971 ம் ஆண்டு அப்போதைய பிரதமர் இந்திரா காந்தி அமெரிக்காவின் அழுத்தத்திற்கு அடிபணியாமல் இருந்தார் என்பது குறித்து பேசிய பழைய வீடியோவை அவர் வெளியிட்டுள்ளார். வாஷிங்டனில் அதிபர் டிரம்ப் பேசும்போது, இந்திய பிரதமர் மோடியுடன் எனக்கு நல்ல நட்பு உள்ளது. மோடி என்னை பார்க்க வந்தார். வருவதற்கு முன் உங்களை சந்திக்க வரலாமா என்று கேட்டார். அதற்கு நான் சரி என்றேன்.*

*ரஷ்யா–உக்ரைன் போருக்கு நிதியளிக்கும் வகையில் இந்தியா எண்ணெய் வாங்குவதாக நாங்கள் கருதினோம். எங்கள் அழுத்தத்தினால் இந்தியா தற்போது ரஷ்ய எண்ணெய் இறக்குமதியை கணிசமாக குறைத்துள்ளது என்றார்.*

*இது குறித்து மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி பழைய வீடியோ ஒன்றை பகிர்ந்து எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளதாவது: இந்தியா–பாகிஸ்தான் போரின் போது, அதிபர் டிரம்பின் தொலைபேசி அழைப்பு வந்த பின்னர் பிரதமர் மோடி சரணடைந்து விட்டார். ஆனால் கடந்த 1971ம் ஆண்டு நடந்த போரின் போது அமெரிக்கா கடற்படை கப்பல்களை அனுப்பியும் போரை நிறுத்த அப்போதைய பிரதமர் இந்திரா காந்தி மறுத்து விட்டார். இதன் மூலம் இந்திரா காந்தி ஆட்சி, மோடி ஆட்சிக்கும் உள்ள வித்தியாசத்தை புரிந்து கொள்ள முடியும் என குறிப்பிட்டுள்ளார்.*

*(ஐ)*




# பிரிந்து செல்பவர்களில் பெண்களே அதிகம்

இருமனம் இணைந்த திருமண பந்தத்தை முறிக்கும் விவாகரத்து என்பது தற்போதும் உலகம் முழுவதும் பரவலாக உள்ளது. 193 நாடுகளில் விவாகரத்து என்பது சட்டப்பூர்வமாக உள்ளது. விவாகரத்து என்ற வார்த்தையை கேட்டவுடன், நம்மில் பலருக்கு பெண்களை பற்றிய கவலையே முன்னோங்கி நிற்கும். அவர்களின் எதிர்காலம் என்னவாகுமோ? என்ற அனுதாபம் தான் அனைவரிடமும் வெளிப்படும். ஆனால், எல்லா விவாகரத்துகளிலும் ஆண்களும் கடுமையாக பாதிக்கப்படுகின்றனர் என்பதை யாரும் உணர்வதில்லை.

விவாகரத்தால்ஒரு பெண் சந்திக்கும் வேதனை, கவலை, தனிமை, நிம்மதி இழப்பு, சமூகத்தின் சாடல்போன்ற அனைத்து சிரமங்களையும் ஆண்களும் எதிர்கொள்கின்றனர். குடும்பம் என்றதும் அன்பு, பாசம், அரவணைப்பு, அனுசரணை போன்ற அனைத்தும், பெண்களிடம் இருந்து தான் கிடைக்கும். பெண்கள் மட்டுமே அதற்கு பொருத்தமானவர்கள் என்ற எண்ணமும் நம்மிடம் பரவலாக உள்ளது. ஆனால், அவை அனைத்தும் ஆண், பெண் என்ற இருபாலருக்கும் பொதுவானவை என்ற எண்ணம் பரவலாக இல்லை.



இதுபோன்ற பல்வேறு காரணங்களால், விவாகரத்து வழக்குகளில் பெரும்பாலான ஆண்கள் பலிகடாவாக மாற்றப்படுகின்றனர் என்பது சமீபத்திய குமுறலாக மாறியுள்ளது. இதே போல், விவாகரத்து விவகாரங்களில் பெண்களிடம் இருக்கும் தெளிவு ஆண்களிடம் இல்லை என்பதையும், சமீபத்திய ஆய்வுகள் வெளிப்படுத்தியுள்ளது. அதாவது பெண்களை விட 12 சதவீதம் ஆண்கள் விவாகரத்து என்பது எந்த சூழ்நிலையிலும் சரியில்லை என்றே கருதுகின்றனர்.



ஆண்களில் 36 சதவீதம் பேர், ஒருபோதும் விவாகரத்து செய்யக்கூடாது என்ற மனநிலையில் உள்ளனர். ஆனால், பெண்களை பொறுத்தவரை 24 சதவீதம் பேரிடம் மட்டுமே இந்த எண்ணம் உள்ளது. இதேபோல் 6 சதவீதம் பெண்கள், எந்த தவறும் இல்லாமல், விவாகரத்து பெறமுடியும் என்ற நம்பிக்கை கொண்டவர்களாக உள்ளனர். இந்த வகையில் விவாகரத்து விவகாரங்களில், ஆண்களுக்கு சட்டமும் பாரபட்சம் காட்டுகிறது என்கின்றனர் ஆய்வாளர்கள்.

இது குறித்து விவாகரத்து வழக்குகள் சார்ந்த சட்ட நிபுணர்கள் கூட்டமைப்பு நிர்வாகிகள் கூறியதாவது: சமீப ஆண்டுகளாக இந்தியாவின் சட்டப்பூர்வ விவாகரத்து தீர்வுகள் மற்றும் அதுகாட்டும் பாலின சார்புகள் அனைத்தும் விவாதங்களைக் கண்டுள்ளது. அதில் ஒரு குறிப்பிடத்தக்க வழக்கு, பெங்களூருவைச் சேர்ந்த தகவல் தொழில்நுட்ப வல்லுநரை உள்ளடக்கியது.

அவர்தனது முன்னாள் மனைவிக்கு கணிசமான ஜீவனாம்சம் வழங்க நீதிமன்றத்தால் கட்டாயப்படுத்தப்பட்டார். இது சமூக ஊடகங்களிலும் பல்வேறு அமைப்புகளிலும் பரவலான விவாதத்தைத் தூண்டியது. இந்த சம்பவம் பெண்ணியத்தின் சாராம்சம் மற்றும் உண்மையான பாலின சமத்துவத்திற்காக வாதிடுவதில் கேள்வியை எழுப்பியது. அதன் பங்கு பற்றிய உரையாடல்களை மீண்டும் தூண்டியுள்ளது.

பெண்ணியம், அதன்மையத்தில் அனைத்து பாலினங்களுக்கும் சம உரிமைகள் மற்றும் வாய்ப்புகளை ஏற்படுத்த முயல்கிறது. இது ஆண்களுக்கு எதிரான பகைமையை வளர்க்கும் கருத்தியல் அல்ல. தவறாகக் கருதப்படக் கூடாது. மாறாக, இது வரலாற்று ரீதியாக பின்தங்கிய பெண்களைக் கொண்ட முறையான ஏற்றத்தாழ்வுகளை அகற்ற முயல்கிறது. அதே நேரத்தில், ஆண்களைப் பாதிக்கும் பிரச்னைகளை அங்கீகரித்து உரையாற்றுகிறது.

இந்தியாவில் உள்ள விவாகரத்துச் சட்டங்களின் பின்னணியில், சட்ட விதிகள்

(7ஆம் பக்கம் பார்க்க...)

# பால் பவுடரில் நச்சுப் பொருள் இருப்பதற்கான சாத்தியக்கூறுகள் கண்டறியப்பட்டுள்ளன




பிரான்ஸ், ஜெர்மனி உட்பட பல ஐரோப்பிய நாடுகளில் நெஸ்லே நிறுவனம் தனது குழந்தை உணவுப் பவுடர் ஃபார்முலாவை திரும்பப் பெறுவதாக அறிவித்துள்ளது. “ஊநசநரடனைந” என்ற நச்சுப் பொருள் இருப்பதற்கான சாத்தியக்கூறுகள் கடந்த டிசம்பர் மாதம் முதல் கண்டறியப்பட்டுள்ள நிலையில் நெஸ்லே இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. பால் பொருள்களில் பயன்படுத்தப்பட்ட ஒரு மூலப்பொருள் தேவையான தரநிலைகளை பூர்த்தி செய்யவில்லை.

பிறந்த குழந்தைகளுக்கு வழங்கப்படும் பால் பொருட்களின் முதன்மையாக கருதப்படுவது நெஸ்லே நிறுவனத்தின் பொருட்கள் தான். இவை குழந்தைக்கான ஃபார்முலா பால் என்பது 12 மாதங்களுக்கு உட்பட்ட குழந்தைகளுக்குத் தாய்ப்பாலுக்கு மாற்றாக வழங்கப்படும் ஒரு சத்தான உணவாகும்.

இந்த நிலையில், பிரான்ஸ், ஜெர்மனி உட்பட பல ஐரோப்பிய நாடுகளில் நெஸ்லே நிறுவனம் தனது குழந்தை உணவுப் பவுடர் ஃபார்முலாவை திரும்பப்பெறுவதாக அறிவித்துள்ளது. பால் பொருள்களில் பயன்படுத்தப்பட்ட ஒரு மூலப்பொருள் தேவையான தரநிலைகளை பூர்த்தி செய்யவில்லை எனவும் அந்த பால் பொருள்களில் குமட்டல், வாந்தி, செரிமானச் சிக்கலை ஏற்படுத்தக்கூடிய நச்சுப்பொருள் இருப்பது கண்டறியப்பட்டதாகவும் நிறுவனம் கூறியுள்ளது.

இதனிடையே கடந்த டிசம்பர் மாதம் முதல் பால் பொருளில் நச்சுப் பொருள் இருப்பதற்கான சாத்தியக்கூறுகள் கண்டறியப்பட்டுள்ள நிலையில், குழந்தை உணவுப் பவுடர் ஃபார்முலாவை திரும்பப்பெறும் நடவடிக்கையை நெஸ்லே மேற்கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

மேலும், பால் பொருள்களை வாங்கிய வாடிக்கையாளர்கள் அவற்றை திருப்பி அளித்து முழுமையான பணத்தைப் பெற்றுக்கொள் ளலாம் என்றும், அதற்கான வழிகாட்டுதல்களை நெஸ்லே வழங்கி வருவதாகவும் அறிவிக்கப்பட டுள்ளது. (ஐ)

## ரூ.25,000 கோடி கச்சா எண்ணெயை அமெரிக்காவுக்கு வெனிசுலா வழங்குகிறது:



வெனிசுலா அதிபர் மதுரோ கைது செய்யப்பட்ட நிலையில், அந்நாடு ரூ.25 ஆயிரம் கோடி மதிப்பிலான 3 முதல் 5 கோடி பீப்பாய் கச்சா எண்ணெயை அமெரிக்காவுக்கு தர இருப்பதாகவும் அவை சந்தை விலைக்கு விற்று பணமாக்கப்படும் என்றும் அமெரிக்க அதிபர் டிரம்ப் அதிரடி அறிவிப்பை வெளியிட்டுள்ளார். வெனிசுலா மீது ராணுவ நடவடிக்கை எடுத்து, அந்நாட்டு அதிபர் நிக்கோலஸ் மதுரோவை கைது செய்த அமெரிக்கா, அவரை நாடு கடத்தி உள்ளது. போதைப் பொருள் கடத்தல் குற்றச்சாட்டில் தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ள மதுரோ, நியூயார்க் நீதிமன்றத்தில் சட்ட விசாரணையை எதிர்கொண்டுள்ளார். இதைத் தொடர்ந்து, வெனிசுலாவின் தற்காலிக அதிபராக டெல்சி ரோட்ரிக்ஸ் பதவியேற்றுள்ள நிலையில், அதிபர் டிரம்ப் நேற்று தனது ட்ரூத் சமூக ஊடக தளத்தில் வெளியிட்ட பதிவு பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

அந்த பதிவில் அதிபர் டிரம்ப், ‘‘வெனிசுலாவின் இடைக்கால அதிகாரிகள், உயர்தரமான, தடை செய்யப்பட்ட 3 முதல் 5 கோடி பீப்பாய்கள் வரையிலான கச்சா எண்ணெயை அமெரிக்காவிற்கு வழங்கப் போவதாக அறிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த எண்ணெய் அதன் சந்தை விலையில் விற்கப்படும். இதன் மூலம் கிடைக்கும் பணத்தை அமெரிக்காவின் அதிபர் என்ற முறையில் என் கட்டுப்பாட்டில் இருக்கும். அந்தப் பணம் வெனிசுலா மற்றும் அமெரிக்க மக்களின் நலனுக்காகப் பயன்படுத்தப்படுவதை நான் உறுதி செய்வேன்” என கூறி உள்ளார்.

வெனிசுலா மீது பொருளாதார தடைகள் இருப்பதால் அதன் எண்ணெயை சந்தை விலைக்கு விற்க முடியாது. ஆனால் இந்த எண்ணெயை வாங்கி அமெரிக்கா விற்பதால் அதை சந்தை விலைக்கு விற்று பணமாக்குவதாக டிரம்ப் கூறி உள்ளார். ஏற்கனவே, மதுரோ கைது செய்யப்பட்ட போது, அமெரிக்க எண்ணெய் நிறுவனங்கள் வெனிசுலாவில் பெரும் அளவில் முதலீடு செய்து அதன் எண்ணெய் வளத்தை பயன்படுத்தி மேம்படுத்தும் என அறிவித்தார். இது தொடர்பாக எண்ணெய் நிறுவனங்களின் நிர்வாகிகளுடன் வெள்ளை மாளிகை வரும் வெள்ளிக்கிழமை ஆலோசனை கூட்டமும் நடக்க இருக்கிறது.

தற்காலிக அதிபரான ரோட்ரிக்ஸ் சரியானதை செய்யாவிட்டால், வெனிசுலாவை அமெரிக்க நலன்களுடன் ஒத்துப் போகும் நாடாக மாற்றாவிட்டால், மதுரோவைவிட மோசமான விளைவுகளை சந்திப்பார் என அதிபர் டிரம்ப் மிரட்டல் விடுத்திருந்தார். இதற்கிடையே நேற்று அரசாங்க விவசாய மற்றும் தொழில்துறை அதிகாரிகளுக்கு மத்தியில் உரையாற்றிய ரோட்ரிக்ஸ், ‘‘தனிப்பட்ட முறையில் என்னை அச்சுறுத்துபவர்களுக்கு ஒன்றை கூறிக் கொள்கிறேன். என் விதியை அவர்கள் தீர்மானிக்கவில்லை. கடவுள்தான் தீர்மானிக்கிறார். இனி வெனிசுலா அதன் சொந்த கொள்கைகளின்படி செயல்படும்” என கூறி உள்ளார்.

கடந்த 3ம் தேதி அமெரிக்கா நடத்திய தாக்குதலில் 24 வெனிசுலா பாதுகாப்பு படை வீரர்கள் பலியாகி இருப்பதாக அந்நாட்டு ராணுவம் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது. இந்த தாக்குதலில் வெனிசுலாவில் பணிபுரியும் 32 கியூபா ராணுவ வீரர்கள், காவல்துறை அதிகாரிகள் பலியானதாக அறிவிக்கப்பட்டது. அமெரிக்கா தரப்பில் 5 வீரர்கள் காயமடைந்துள்ளனர். அதில் 3 பேர் பணிக்கு திரும்பி விட்டதாகவும் 2 பேர் மட்டும் சிகிச்சை பெறுவதாகவும் கூறப்பட்டுள்ளது. (ஐ)

## 68 ஹெலிகாப்டர்கள் இறக்குமதியில் தாமதம் புதிய வரி விதிப்பால் என் மீது மோடிக்கு கோபம்

இந்தியப் பொருட்கள் மீதான வரி உயர்வால் பிரதமர் மோடி அதிருப்தியில் இருப்பதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார். ரஷ்யாவிடமிருந்து கச்சா எண்ணெய் வாங்குவதை எதிர்த்து, இந்தியப் பொருட்கள் மீது அமெரிக்க அரசு 50 சதவீதம் கூடுதல் வரியை விதித்தது. இதில் 25 சதவீதம் பரஸ்பர வரியாகவும், மீதமுள்ள 25 சதவீதம் அபராத வரியாகவும் கணக்கிடப்படுகிறது.

இந்நிலையில் வாஷிங்டனில் நேற்று நடைபெற்ற குடியரசுக் கட்சி கூட்டத்தில் பேசிய அதிபர் டிரம்ப்,

‘எங்களுடைய புதிய வரி விதிப்பு நடவடிக்கையால் இந்திய பிரதமர் மோடிக்கு, என் மீது மகிழ்ச்சி இல்லை. அவர் கோபத்தில் இருக்கிறார். ரஷ்யா - உக்ரைன் போருக்கு நிதியளிக்கும் வகையில் இந்தியா எண்ணெய் வாங்குவதாக நாங்கள் கருதினோம். ஆனால் எங்களின் அழுத்தத்தால் இந்தியா தற்போது ரஷ்யாவிடமிருந்து எண்ணெய் இறக்குமதி செய்வதை கணிசமாக குறைத்துள்ளது. மோடி மிகச் சிறந்த மனிதர், அவருடன் எனக்கு நல்ல நட்பு உள்ளது’ என்று வெளிப்படையாகப் பேசினார். மேலும் பாதுகாப்புத் துறை ஒப்பந்தம் குறித்தும் பேசிய அவர், ‘68 அப்பாச்சி ஹெலிகாப்டர்கள் வழங்குவதில் 5 ஆண்டுகள் தாமதம் உள்ளதாக மோடி என்னிடம் கூறினார். அதை உடனடியாக சரிசெய்ய அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளேன்’ என்று தெரிவித்தார். இதனிடையே அமெரிக்காவின் இந்த 50 சதவீத வரி விதிப்பால் ஜவுளி, மருந்து மற்றும் நகை ஏற்றுமதி கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் ஏற்றுமதி 86.5 பில்லியன் டாலரிலிருந்து 50 பில்லியன் டாலராக குறைய வாய்ப்புள்ளதாகக் கணிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், ‘140 கோடி மக்களின் நலன் மற்றும் பாதுகாப்பைக் கருதியே ரஷ்யாவிடம் எண்ணெய் வாங்குகிறோம், அமெரிக்காவின் இந்த வரி விதிப்பு நியாயமற்றது மற்றும் காரணமற்றது’ என்று இந்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இஸ்ரேலுக்காக உளவு பார்த்தவருக்கு தூக்கு: ஈரான் நடவடிக்கை




இஸ்ரேலின் உளவு அமைப்புக்காக உளவு பார்த்த நபருக்கு ஈரான் தூக்கு தண்டனையை நிறைவேற்றியது. இஸ்ரேலின் உளவு அமைப்பான மொசாட்டுக்காக உளவு பார்த்ததாக ஒருவரை ஈரான் கைது செய்தது. அவரது பெயர் அலி அர்தெஸ்தானி என்று அடையாளம் காணப்பட்டுள்ளது. அவர் மொசட் அதிகாரிகளுக்கு முக்கியமாக தகவல்களை அனுப்பி அதற்கு ஈடாக கிரிப்டோகரன்சி வடிவில் நிதிப் பரிசுகளை பெற்றுள்ளார். ஒரு மில்லியன் டாலர் சன்மானம் மற்றும் இங்கிலாந்து விசாவை பெறுவோம் என்றும் அவர் நம்பிக்கையோடு இருந்துள்ளார். ஈரானின் முக்கியமான இடங்களின் புகைப்படங்களை அவர் மொசாட் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்துள்ளார். மேலும் இணையதளம் மூலமாக ஆள்சேர்ப்பு நடவடிக்கையிலும் அவர் ஈடுபட்டதாக ஈரான் அதிகாரிகள் குற்றம்சாட்டியுள்ளனர். சம்பந்தப்பட்ட நபர் தன் மீதான உளவு குற்றச்சாட்டுக்களை ஒப்புக்கொண்டுள்ளார். இதனை தொடர்ந்து ஈரான் அலி அர்தெஸ்தானியை தூக்கிலிட்டுள்ளது. ஆனால் அவர் எங்கு, எப்போது கைது செய்யப்பட்டார் என்பது உள்ளிட்ட விவரங்களை ஈரான் வெளியிடவில்லை. (ஐ)

## பேரிடரால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வீடுகளை நிர்மாணித்தல் மற்றும் இழப்பீடு வழங்கும் ஆரம்ப நிகழ்வு நாளை இடம்பெறும் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அனுராதபுரம் மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களில் மாவட்டங்களில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெறும்.

அனுராதபுரம் மாவட்டத்தில் கல்னேவ, ஹந்துன்கம, ராஜாங்கனய மற்றும் சிறிமாபுர ஆகிய பகுதிகளில் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக புதிய வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன.

குருநாகல் மாவட்டத்தில் நிகவெரட்டிய, விதிகுலிய சந்தி, ரிதீகம மற்றும் தொடம்கஸ்லந்த ஆகிய பகுதிகளில் வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன.

டித்வா சூறாவளியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும் வேலைத்திட்டத்தின் கீழ் இந்தப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

## வடக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஏதேனும் அனர்த்த நிலை ஏற்படுமாயின் 117 என்ற துரித தொலைபேசி இலக்கத்துக்கு அறியப்படுத்துமாறும் கோரப்பட்டுள்ளது.

## சிறுபான்மை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எனவும் நாமல் வலியுறுத்தியுள்ளார்.

அண்மையில், இலங்கை, பங்களாதேஷ் மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளில் ஏற்பட்ட பொது அமைதியின்மையை சில தீவிரவாத சக்திகள் ஆதரித்து, ஊக்குவித்துள்ளதாகவும் நாமல் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் தீவிரவாதத்தை எதிர்கொள்வதற்கும், அரசியல் வன்முறைகளை தடுப்பதற்கும், சிறுபான்மையினரின் உரிமைகளை பாதுகாப்பதற்கும் கூட்டு அர்ப்பணிப்பு அவசியம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனவே, வளர்ந்துவரும் நெருக்கடி நிலைகளை எதிர்நோக்குவதற்கு கூட்டாக பதிலளிக்க வேண்டும் எனவும், அதற்கு பிராந்திய ஒத்திசைவு அத்தியாவசியம் எனவும் அவர் கூறியுள்ளார்.

இந்தச் செயற்பாடுகளுக்கு இந்தியாவின் தலைமைத்துவமானது பிராந்தியத்தின் நீண்டகால அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையைப் பேணுவதற்கு மையப்புள்ளியாக அமையும் எனவும் நாமல் சுட்டிக்காட்டியுள்ளார்.

## திருகோணமலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கடலலையின் உக்கிரம் காரணமாக சுற்றுலாப் பயணிகளின்றி கடற்கரை வெறிச்சோடிக்கிடப்பதை அவதானிக்க முடிகின்றது.

அத்துடன் கரையோரத்திலிருந்த மீன்பிடி படகுகளும் பாதுகாப்பாக ஏற்றிவைக்கப்பட்டுள்ளமையும் அவதானிக்க முடிந்தது.

# யாழ். சுன்னாகம் பகுதியில் 'கந்தரோடை விகாரை' எனப் பொறிக்கப்பட்டிருந்த பெயர்ப்பலகை அகற்றம்!

*யாழ். சுன்னாகம் பகுதியில் 'கந்தரோடை விகாரை' எனப்பொறிக்கப்பட்டிருந்த பெயர்ப்பலகை இன்றைய தினம் அகற்றப்பட்டுள்ளது.*

*வலிகாமம் தெற்குப் பிரதேச சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக இந்த பலகை இன்றையதினம் அகற்றப்பட்டுள்ளது.*

*குறித்த இடத்தை 'கந்தரோடை தொல்லியல் ஆய்வு மையம்' என அடையாளப்படுத்துவதே மிகவும்பொருத்தமானது என சபையில் எடுக்கப்பட்ட முடிவிற்கு அமைய விகாரை பெயர்ப்பலகை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.*

*அதேவேளை அகற்றப்பட்ட பெயர்ப்பலகை காணப்பட்ட அதே இடத்தில், ஒல்லாந்தர் காலத்தில் அமைக்கப்பட்ட சந்தைக் கட்டடத் தொகுதியின் வரலாற்றுச் சிறப்பம்சங்களை விபரிக்கும் வகையிலான புதிய கல்வெட்டுப் பெயர்ப்பலகை ஒன்று மும்மொழிகளிலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.*

*நாட்டின் எதிர்காலச் சந்ததியினருக்குச் சரியான வரலாற்றைக் கொண்டு செல்லும் நோக்கிலேயே இந்தப் புதிய பெயர்ப்பலகை காட்சிப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

# தமிழர்களுக்கான அரசியல் ரீதியான நிரந்தர தீர்வு வழங்கப்படும்- அமைச்சர் விஜித ஹேரத்!

தமிழர்களுக்கான அரசியல் ரீதியான நிரந்தர தீர்வு வழங்கப்படும் என வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களில் பல அரசுகள் தமிழ் மக்களுக்கு வாக்குறுதிகள் வழங்கிய போதிலும், அவை நடைமுறைப்படுத்தப்படவில்லை. அந்தத் தவறுகளை மீண்டும் செய்யாமல், உண்மையான மற்றும் நீடித்த அரசியல் தீர்வை வழங்குவதற்காக தற்போதைய அரசு பொறுப்புடன் செயற்படும்.

தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள், சமத்துவம், பாதுகாப்பு மற்றும் அதிகாரப் பகிர்வு போன்ற அடிப்படை விடயங்கள் தொடர்பில் விரிவான கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்படும்.

அனைத்து இன மக்களையும் உள்ளடக்கிய ஒற்றுமையான நாட்டை கட்டியெழுப்புவதே இந்த அரசின் நோக்கமாகும்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது நாட்டின் உள்நாட்டு விடயமாக இருந்தாலும், சர்வதேச சமூகத்திற்கும் இலங்கை அரசு வெளிப்படையாகவும் பொறுப்புடனும் செயற்படுவதாக நம்பிக்கை அளிக்க வேண்டிய தேவையும் உள்ளது.

தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகள் மதிக்கப்பட வேண்டும். அவர்களது நம்பிக்கையை மீட்டெடுப்பதே இந்த அரசின் முதன்மையான இலக்கு. அதற்காக அரசியல் ரீதியான நிரந்தர தீர்வு வழங்கப்படும் என்று உறுதியளிக்கின்றோம். வாக்குறுதி மட்டும் அல்ல, அதை நடைமுறையில் நிறைவேற்றும் அரசாக இந்த அரசு செயற்படும் - என அவர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அதிபர் இடமாற்றத்திற்கு எதிர்ப்பு




அக்கரைப்பற்று கல்வி வலய பதுரியா வித்தியாலய அதிபரின் இடமாற்றத்திற்கு எதிராக பாடசாலை மாணவர்களின் பெற்றோர்கள் வியாழக்கிழமை (08) அன்று கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பாடசாலை மாணவர்களின் கல்வி, ஒழுக்கம் மற்றும் மொத்த அபிவிருத்திக்காக அர்ப்பணிப்புடன் சேவையாற்றி வந்த அதிபரை தொடர்ந்து பணியாற்றும் நடவடிக்கையினை முன்னெடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியே இந்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரால் இடமாற்றம் செய்யப்பட்ட புதிய அதிபர் பாடசாலைக்கு வரக்கூடாது என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பெற்றோர்கள் கோரிக்கை விடுத்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பெற்றோர்கள், கல்வி அமைச்சின் செயலாளருக்கு எதிராக பல்வேறு சுலோகங்களை ஏந்தியவாறு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

மேலும், தற்போதைய அதிபரின் தலைமையில் பாடசாலையின் கல்வி தரம் உயர்ந்துள்ளதாகவும், மாணவர் ஒழுக்கம் மற்றும் கூடுதல் செயற்பாடுகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் பெற்றோர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக உரிய அதிகாரிகள் தலையிட்டு மாணவர்களின் நலனை முதன்மைப்படுத்தி உடனடியாக தீர்வு வழங்க வேண்டும் என பெற்றோர் கோரிக்கை விடுத்தனர். (ஐ)

# பிரிந்து செல்பவர்களில்......

முக்கியமாக பெண்களைப் பாதுகாப்பதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளன என்ற கருத்து உள்ளது. இது ஆண்கள் பின்தங்கியதாக உணரக்கூடிய சூழ்நிலைகளுக்கு வழிவகுக்கும். உதாரணமாக, இந்தியச் சட்டத்தின் கீழ், விவாகரத்துக்குப் பிறகு நிதி பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, கணவரிடம் இருந்து பராமரிப்பு மற்றும் ஜீவனாம்சம் பெற பெண்களுக்கு உரிமை உண்டு.

இருப்பினும், இதே போன்ற சூழ்நிலைகளில் ஆண்களுக்கான பரஸ்பர உரிமைகள் தெளிவாக வரையறுக்கப்படவில்லை,

இது இந்த சட்டங்களின் சமமான பயன்பாடு பற்றிய விவாதங்களுக்கு வழிவகுக்கிறது. ஆண்களும் பெண்களும் சட்டத்தின் கீழ் நியாயமான முறையில் நடத்தப்படுவதை உறுதி செய்வது உண்மையான பாலின சமத்துவத்திற்கு அவசியம். வாழ்க்கைத் துணைவர்கள் இருவரும் குடும்ப உறுப்பினர்களை சம்பாதிக்கும் சமகால உண்மைகளைப் பிரதிபலிக்கும் வகையில் ஜீவனாம்சம் மற்றும் பராமரிப்புச் சட்டங்களை மறு மதிப்பீடு செய்வது இதில் அடங்கும்.

மேலும், ஆண்களின் உரிமைகளுக்காக வாதிடுவது பெண்ணிய இயக்கத்தை குறைத்து மதிப்பிடுவதற்கு உட்படுத்துகிறது என்ற கட்டுக்கதையை அகற்றுவது மிகவும் முக்கியமானது.

உண்மையான பெண்ணியம் என்பது இருபாலருக்கும் சமத்துவத்தை ஆதரிப்பதாகும். இதை உணர்ந்து சட்டத்தின் போக்கு இருக்க வேண்டும். இவ்வாறு நிர்வாகிகள் கூறினர்.

அர்ப்பணிப்பு இல்லாமையால் 75 சதவீதம், துரோகத்தால் 59.6 சதவீதம், சரிசெய்ய முடியாத வேறுபாடுகளால் 57.7 சதவீதம், மிகவும் இளம்வயது திருமணத்தால் 45.1 சதவீதம், நிதி நெருக்கடியால் 36.7 சதவீதம், பொருள் துஷ்பிரயோகத்தால் 34.6 சதவீதம், குடும்ப வன்முறையால் 23.5 சதவீதம் என்று விவாகரத்துகள் உலகளவில் நடப்பதாகவும் ஆய்வுகள் தெரிவித்துள்ளது. இதே போல், மாலத்தீவில் 5.52 சதவீதம், கஜகஸ்தானில் 2.3 சதவீதம், ரஷ்யாவில் 3.9 சதவீதம், மால்டோவாவில் 3.8 சதவீதம், ஜார்ஜியாவில் 3.8 சதவீதம், லிதுவேனியாவில் 2.8 சதவீதம், அமெரிக்காவில் 2.8 சதவீதம், பெலாரஸில் 3.7 சதவீதம், சீனாவில் 3.2 சதவீதம், கியூபாவில் 2.9 சதவீதம், பின்லாந்தில் 2.4 சதவீதம், ஸ்வீடனில் 2.5 சதவீதம், டென்மார்க்கில் 2.7 சதவீதம், உக்ரைனில் 3.1 சதவீதம், கனடாவில் 2.8 சதவீதம் விவாகரத்துகள் நடப்பதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதே நேரத்தில், இந்தியாவில் 0.1 சதவீதம், வியட்நாமில் 0.2 சதவீதம், இலங்கையில் 0.2 சதவீதம் என்ற அளவில் மிகக்குறைவாக விவாகரத்துகள் நடப்பதும் குறிப்பிடத்தக்கது.

"பெண்கள் பெரும்பாலும் நிதி சுதந்திரம் இல்லாதவர்கள் மற்றும் விவாகரத்துக்குப் பிறகு, பொருளாதார கஷ்டங்களுக்கு ஆளாக நேரிடும். உதாரணமாக, இந்து வாரிசு (திருத்தம்) சட்டம், 2005, பெண்களுக்கு சமமான வாரிசு உரிமைகளை வழங்குவதற்கான ஒரு குறிப்பிடத்தக்க படியாகும். இது சொத்து உரிமைகளில் வரலாற்று வேறுபாடுகளை நிவர்த்தி செய்கிறது. பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பதும், நிலை நிறுத்துவதும் இன்றியமையாதது.

அதே வேளையில், பல பெண்கள் எதிர்கொள்ளும் தொடர்ச்சியான சவால்களைக் கருத்தில் கொண்டு-சட்ட அமைப்புகளால், ஆண்கள் அநியாயமாகப் பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்வதும் முக்கியமானது. பாலின வேறுபாடின்றி அனைத்து தனிநபர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகளை கருத்தில் கொண்டு, சமநிலையான அணுகுமுறைக்கு பாடுபடுவது உண்மையான சமத்துவ சமூகத்தின் தனிச்சிறப்பாகும்," என்கின்றனர் மூத்த சட்ட நிபுணர்கள்.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 08.01.2026 வெளியிடப்பெற்றது.